# பத்திரிக்கைச் செய்தி

## 100 நாள் வேலை திட்டத்தின் கட்டிய புதிய வீட்டிற்கு கூலி கொடுக்க ரூ.3,000/- லஞ்சம் கேட்டு பெற்ற பஞ்சாயத்து செயலாளர் கைது.

புகார்தாரர் திரு.ஆறுமுகம், பெரிய காடம்பட்டி காட்டுவளவு, மங்கானூர், சிக்கம்பட்டி கிராமம், ஓமலூர், சேலம் மாவட்டத்தில் வசித்து வருகிறார். இவர் பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா வீடு காட்டும் திட்டத்தின் கீழ் ரூ.1,70,000/- மதிப்புள்ள வீட்டினை கட்டுமானம் செய்ய 100 நாடட்கள் வேலை திட்டத்தின் கீழ் கட்டியுள்ளார். 100 நாள் வேலை திட்டத்தின் கீழ் கட்டுமான கூலியாக ரூ.20,000/-யை பெற பஞ்சாயத்து அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். திரு.கௌரி சங்கர், பஞ்சாயத்து செயலாளர், தாரமங்கலம் சிக்கம்பட்டி பஞ்சாயத்து, அவர்கள் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க தனக்கு லஞ்சமாக ரூ.5,000/- கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். பின் முன் பணமாக ரூ.3,000/- தர வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சேலம் பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரின் மேல் பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இன்று 30.03.2023 திரு.கௌரி சங்கர், பஞ்சாயத்து செயலாளர், லஞ்ச பணம் ரூ.3,000/-யை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

# PRESS NOTE

## PANCHAYAT SECRETARY, ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.3,000/- FOR 100 DAYS WORKING SCHEME SALARY.

The complainant Tr.Arumugam, is residing at Periakadampatti, Kattuvalavu, Manganur, Omalur, Salem District. He himself constructed a new house under Pradan Mandir Avas Yojana scheme for Rs.1,70,000/- and prepared the labour charges for the house under 100 days working scheme for Rs.20,000/- He applied for the payment of labour charges bill of Rs.20,000/- at Singampatti Panchayat Office, Tharamangalam, Salem District. Tr.Gowri Sankar, Panchayat Secretary, Singampatti Panchayat Office, Tharamangalam, demanded Rs.5,000/- as bribe for processing his application. Tr.Gowri Sankar asked to the complainant give bribe amount of Rs.3,000/- as advance. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Salem detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized. Today 30.03.2023, during the trap proceedings, Tr.Gowri Sankar, Panchayat Secretary, reiterated his demand and received the advance bribe amount of Rs.3,000/- from the complainant. The accused was arrested.